# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – III

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 29.03.2016 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- கௌரவ கல்வி அமைச்சர்
- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மா.க.திணைக்களம், வட மாகாணம்.
- வலயக்கல்விப் பணிப்பாளர்கள் (தென்மராட்சி ,தீவகம் ,முல்லைத்தீவு, துணுக்காய் , கிளிநொச்சி, வவுனியா தெற்கு,வவுனியா வடக்கு, மடு,மன்னார்)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பிரதம கணக்காளர் ,மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ( மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்,)
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்- மாகாணக் கல்வித் திணைக்களம்.
- நிர்வாக உத்தியோகத்தர், மாகாண கல்வி அமைச்சு
- தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்த மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு இந்த வருடத்திற்குரிய மூன்றாவது மாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.மேற்படி கூட்டத்திற்கு கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் தாமதமாக வருகைதருவார் என்பதையும் தெரிவித்து கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கடந்த மாதத்திற்குரிய கூட்ட அறிக்கையானது அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இவ்அறிக்கையில் ஏதாவது திருத்தம் இருந்தால் தெரிவிக்குமாறும் கூறினார்.அவ்வாறு திருத்தம் இல்லையெனில் அவ் அறிக்கைனை ஏற்றுக் கொண்டு கூட்டத்தினை தொடந்து நடாத்திச் சென்றார்.

பாடசாலை கட்டடவேலைகள் மேற்படி விடயம் தொடர்பாக ஆராயப்பட்டது.எமக்கு தரப்பட்ட அனுமதிகள் ஒதுக்கீடுகள் தொடர்பாக வழங்கப்பட்ட வேலைகள் தொடர்பாகவும் ஏற்கனவே செய்து முடிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும்,தெரிவித்தார் கடந்தவருடத்திற்கான PSDG வேலைத்திட்டம் மிக

**முக்கியமானது எனவும் அதில் ஒதுக்கப்பட்ட 969 மில்லியன் ரூபாவில் செய்யப்பட்ட வேலைகள் தொடர்பாக ஆராயப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.மேலும் கடந்த கூட்டத்தில் கடந்தவருடத்தில் செய்து முடிக்கப்படாத மேற்படி வேலைகள் யாவும் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் முடித்து, செலுத்தப்பட வேண்டிய மொத்த நிதியினையும் செலுத்தி முடிக்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டதாக தெரிவித்தார்.**

## TSEP வேலைகள்

**மேற்படி வேலைத்திட்டத்திற்கு உலக வங்கியில் இருந்து எமக்கு ரூபா 100 மில்லியன் பணம் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டு சென்ற வருடம் முடிவுறுத்தப்படாத 6 வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.**

**1.கிளி/கோணாவில் மகாவித்தியாலயம்:-** மேற்படி வேலைத்திட்டத்திற்கு வர்ணம் பூசுதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் 01.04.2016 திறக்கமுடியும் எனவும் பாடசாலைகள் வேலை பொறியலாளரால் தெரிவிக்கப்பட்டது.மேற்படி வேலைத்திட்டத்திற்கான நிதி ஏற்பாடுகள் தொடர்பாக மாகாண கல்வித் திணைக்கள கணக்காளரிடம் விளக்கம் கோரி தாமத்திற்கான காரணத்தினையும் கேட்டுக் கொண்டார்.

மேற்படி வேலைகளுக்கான ஒப்பந்த நீடிப்புக்கான அனுமதிகள் கிடைக்கவில்லை ,அத்துடன் சில தரவுகளும் இன்மையால் 3 மில்லியன் வேலைகள் இன்னும் செய்யப்படவேண்டி இருப்பதாக பாடசாலைகள் வேலை பொறியிலாளர் திரு.தே.சுரேஸ் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

**2.மு/ஆறுமுகம் வித்தியாலயம்:-**2மில்லியன் உறுதிச் சீட்டு எடுத்து விட்டதாகவும்,ஒப்பந்த நீடிப்பு அனுமதி இன்மையால் பணத்தினை செலுத்தி வேலையை முடிக்க முடியாதுள்ளதாக தெரிவித்தார்.

**3. வ/கனகராயன்குளம் மகா வித்தியாலயம் :-**

வேலைகள் யாவும் முடிவடைந்து விட்டதாகவும் இறுதி பட்டியல் (Final Bill) தரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

**4. மு/கொக்குத்தொடுவாய்.அ.த.க.பாடசாலை:-** வேலைமுடிவடைந்து திறப்புவிழாவும் முடிவடைந்து விட்டதாகதெரித்தார் ஆயினும் இறுதி உறுதிச் சீட்டுப் பட்டியல் வரவில்லை எனவும் தெரிவித்தார்.

**5. யாகீ தம்பாட்டி.அ.த.க.பாடசாலை :-** மேற்படி வேலைத்திட்டத்தில் 70 வீதமான வேலைகள் முடிவடைந்து விட்டதாகவும், கூரை போடாமல் அதற்குரிய உறுதிச் சீட்டு தரப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி தொழில் நுட்ப உத்தியோகத்தர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்தக்காரரருக்கு ஏற்கனவே காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டுள்ள போதும் இதுவரையும் முடிவுறுத்தவில்லை ஏனவே இன்னுமொரு காலநீடிப்பு வழங்கி திகதி குறிப்பிட்டு அக்குறிப்பிட்ட நாளுக்குள் வேலையை முடிவுறுத்துமாறு கடிதம் அனுப்புமாறும் அவருக்கு புதிதாக

ஒப்பந்த வேலைகளைக் கொடுப்பதை இடைநிறுத்துமாறும் செயலாளர் தெரிவித்தார். தொழில்நுட்பஉத்தியோகத்தர்களுக்கு மேற்படி பகுதியை சென்று பார்வையிடுமாறும் மேலும் தெரிவித்தார்.

6.யா/நாவாந்துறைRCTMS :-வேலை முடிவடைந்து விட்டது மின் இணைப்பு வேலைமட்டுமே உள்ளதாகவும் மேற்படி ஒப்பந்தகாரர் மிகவும் மெதுவாக வேலைகளை செய்வதாகவும் தொழில்நுட்பஉத்தியோகத்தர் தெரிவித்தார்.

## PSDG வேலைகள்:-

## Theme 01 வேலைகள் ஆராயப்பட்டது.

492 மில்லியன் வேலைகள் யாவும் பாடசாலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அதில்

01. வலயக்கல்வி அலுவலக வேலை தொடர்டகாக ஆராயப்பட்டது. மேற்படி வேலைகளில் வலயக்கல்வி அலுவலகமானது அலுவலர்கள் வசதியாக இருந்து வேலை செய்ய கூடிய அளவிற்கு வடிவமைத்தால் போதும் எனவும் சிறப்ப வேலைப்பாடுகள் தேவையில்லை எனவும்,20 மில்லியனுக்குள் வேலையை முடிக்குமாறும்,கட்டடங்கள் திணைக்களத்தின் உதவியுடன் வரைபடம் வரைந்து இலகுவான முறையில் கட்டடத்தை அமைக்குமாறும், அதற்கேற்ப மதீப்பீட்டினை தயாரித்து கேள்வி மனு கோடுக்குமாறு செயலாளர் தெரிவித்தார்.
02. எமது அமைச்சின் நிர்வாக கட்டடம் மிக விரைவாக கட்டி முடிக்கப்பட்டு ஏப்ரல் 11 ஆம் திகதிக்குள் முழு வேலைகளும் முடிக்கப்பட்டு 2 கட்டடங்களும் ஒப்படைக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். மின்இணைப்பு மற்றும் வர்ணப்பூச்சு வேலைகள் இருப்பதாகவும் பொறியலாளரால் தெரிவிக்கப்பட்டது. வேலை காலதாமதமாயின் கால தாமதத்திற்கு உரிய தண்டப் பணம்(LD–Liqued Damaged) அறவிடும் படி தெரிவித்தார்.மேலும் செயலாளர் அவர்கள் மாநாட்டு மண்டபத்துக்கு குளிரூட்டல் வசதி மேற் கொள்ளப்படவில்லை எனவும் தரைக்கான கற்கள் பதிக்கப்படவில்லை எனவும்; கல்வி அமைச்சின் பெயர் பதிக்கப்பட்ட பெயர்பலகை தயாரித்து உரிய இடத்தில் பொருத்தவில்லை எனவும், இதற்கான வேலைகளை விரைவு படுத்தி முடிக்கும் படியும் பொறியலாளர் சுரேஸ் அவர்களிடம் கேட்டுக் கொண்டார் .பெயர் பலகையை கேள்வி கோரல் மூலம் அமைத்து முடிக்கும் படியும் செயலாளர் அவர்களால் மேலும் தெரிவிக்கப்பட்டது.குளாய் கிணறு அடிக்கப்படவில்லை எனவும் அதனை விரைவாக செய்யும் படியும் பணப்பிரச்சனை காணப்படவதாக தெரிவத்தமைக்கு பணத்தினைத் தான் வழங்கத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

**யா/காசிப்பிள்ளை வித்தியாலயம்:-**

**மேற்படி வித்தியாலய வேலை தொடர்பாக ஏன்இன்னும் கேள்விகோரல் மேற் கொள்ளவில்லை என செயலாளரால் கேட்கப்பட்டது. எனவும் 7 வேலைகள் கையிலுள்ளதாகவும், தற்போது 4 வேலைகளுக்கு கேள்விகோரப்பட்டுள்ளதால் மிகுதி வேலைகளுக்கு மதிப்பீடு தயாரித்து கேள்வி கோரல் பண்ணுவது தாமதமாவதாக யாழ்ப்பாண வலயத் தொழில் நுட்ப உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது.மேற்படி வேலைகள் தொடர்பாக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களை மேற்பார்வை செய்யும் படி பணிக்கப்பட்டது.**

**வலிகாமம் கல்வி வலயம் :-**

**6 வேலைகள் இருப்பதால் அதற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு விட்டதாகவும், 02 வேலைகளுக்கு கேள்வி கோரப்பட்டு விட்டதாகவும் (வடலியடைப்பு சைவ பிரகாச வித்தியாலயம், அருணோதயாக்கல்லூரி) தொழில் நுட்ப உத்தியோகத்தர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.**

**வடமராட்சி வலயம்:-**

**5 வேலைகள் கேள்வி கோரப்பட்டு விட்டதாகவும், இன்னும் 2 வேலைகளுக்கு 30.03.2016 கேள்வி கோரல் செய்ய உள்ளதாகவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவர்கள் தெரிவித்தார். தாழையடிக்கு R.C.T.M.S.வந்துவிட்டதாகவும் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதனை பிரதம செயலாளர் தான் மாற்றி அமைத்துள்ளதாக செயலாளர் அவர்களால் தெரிக்கப்பட்டது. குடத்தனைப்பாடசாலைக்கு நாளை கேள்விக் கோரல் செய்ய உள்ளதாகவும், தாழையடி வேலை மட்டும் உள்ளதோடு அதன் மதிப்பீடு அளவுத்திட்டத்தினை 110X25 ஆக மாற்றி அமைத்துத் தரும் படியும் கோரப்பட்டது.**

**தீவகவலயம்:-**

**ஒரு வேலைக்கும் மதிப்பீடு தரவில்லை எனவும் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.**

**யா/சுப்பிரமணிய வித்தியாலயம், யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம், யா/வேலணை கிழக்கு மகாவித்தியாலயம் யாவும் கேள்விக் கோரல் செய்து விட்டதாகவும்,யா/யாழ்ரன் கல்லூரி நாளை கேள்விக் கோரப்பட உள்ளதாகவும் தொழில்நுட்டப உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது.**

**கிளிநொச்சி வலயம்:-**

முழு வேலைக்கும் கேள்வி கோரப்பட்டு விட்டதாகவும், கிளி/கோணாவில் மகா வித்தியாலய ஆசிரியர் விடுதி அமைத்தல் வேலைகள் அனுமதி இன்மையால் செய்யமுடியாமல் உள்ளதாக பொறியலாரால் தெரிவிக்கப்பட்டதற்கு, அந்த வேலையினை நிறுத்தி வைக்கும் படி செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

**துனுக்காய் வலயம்:-**

மதிப்பீடு செய்து கொடுத்து விட்டதாகவும் கேள்வி கோரப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்ட்டது.

**மன்னார் :-** கடந்தவாரம் அனைத்து மதிப்பீடு செய்து கொடுத்து விட்டதாகவும் நாளை அதற்கான கேள்வி கோரப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்ட்டது.

**வவுனியா தெற்கு:-** அனைத்து மதிப்பீடு செய்து கொடுத்து விட்டதாகவும் நாளை அதற்கான கேள்வி கோரப்பட்டு உள்ளதாகவும் தெரிவிக்கப்ட்டது.

**மடு:-**

ம/கணேசபுரம் ஆரம்பாடசாலைக்கு ஒதுக்கப்பட் நிதியினை கட்டையடம்பன் RCTMS மாற்றும்படி வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களால் கோரப்பட்டது. ஏனெனில் கணேசபுரம் பாடசாலைக்கு என சொந்தக்காணி இல்லை, போக்குவரத்து பிரச்சனையும் உண்டு, புனர்வாழ்வு முகாமிலிருந்து வந்தமக்கள் இருப்பதால் அங்குள்ள சமூகச்சீர் கேடுகளைத் தவிரக்கும் முகமாக பிள்ளைகளை வெளியே எடுத்து வரவேண்டும் அத்துடன் அங்கு 40 பிள்ளைகள் தான் உள்ளனர் ஆனால் கட்டையடம்பன் RCTMS இல் 70 பிள்ளைகளுக்கு மேல் உள்ளதால் நிதி ஒதுக்கீடுகளை அப்பாடசாலைக்கு மாற்றி அமைப்பது சிறந்தது கல்விப்பணிப்பாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

ம/கணேசபுரத்துக்கான ஒதுக்கீடு சிலவேளைகளில் மாகாணசபை உறுப்பினர்களின் கோரிக்கையாக இருக்கலாம் எனவே அதனை ஆராய்ந்து மேற்படி பாடசாலைக்கான நிதி ஒதுக்கீட்டினை மாற்றி அமைக்கும் படி கடிதம் மூலம் கோரும் படி மாகாணக்கல்விப்பணிப்பாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

ஆகவே மேற்படி கோரிக்கைணை அடுத்த அமைச்சரவையின் ஆலாசனைக்குழுக்கூட்டத்தில் சமர்பிக்குமாறு செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

### ஆசிரியர் விடுதி அமைப்பது தொடர்பானது Theme 1.1.2

மேற்படி விடயம் தொடர்பாக வலயங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பாகவும் வேலைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.
யாழ்பாணத்தில் கஜிதா முஸ்லிம் பெண்கள் பாடசாலை தொடர்பாக ஆராய்ந்தபோது மேற்படி பாடசாலையிலுள்ள மக்கள் இதுவரையும் வெளியேறாமையினால் வேலைகளை ஆரம்பிக்க கடினமாக இருப்பதாக தொழில் நுட்ப உத்தியோகத்தர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
மேற்படி விடயம் தொடர்பாக அரசாங்க அதிபர் அல்லது அப்பகுதி பிரதேச செயலர் தாம் கதைக்கமுடியும் என்பதால் அரசாங்க அதிபருக்கு மேற்படி மக்களை வெளியேற்றுவது தொடர்பாக கடிதம் வரையும் படி மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களால் யாழ் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது.

**வலிகாமம் வலயம் :-**

இளவாலை மெய்கண்டான் பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை தெல்லிப்பளை தங்கம்மா அப்பாக்குட்டி வித்தியாலயத்திற்கு மாற்றி அமைக்கப்பட்டது அகவே மதிப்பீட்டினை மாற்றி அமைக்கும் படி தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.
யாஃவேலணை சுப்பிரமணியம் வித்தியாலயம் கேள்வி கோரல் செய்யப்பட்டு விட்டதாகவும், கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள ஆசிரியர் விடுதிக்கான கேள்விக் கோரல் முடிவடைந்து விட்டதாகவும்.
முல்லைத்தீவில் ஒன்று முடிவடைந்து விட்டதாகவும் அம்பலவன்பொக்கணை மகாவித்தியாலம், மு/குமுழமுனை மகாவித்தியாலயம் அகியற்றுக்கு இன்று மதிப்பீடு தயாரித்துள்ளதாகவும்,பொறியலாளரால் தெரிவிக்கப்பட்டது.தொடர்ந்து துணுக்காய் நட்டாங்கண்டல் ஆசிரியர் விடுதியின் அளவுத்திட்டத்தினை மாற்றி அமைக்கும் படி கோரப்பட்டதற்கு மேற்படி விடுதியானது கொத்தணியாக உள்ளமையினால் அதன் அளவுத்திட்டத்தினை 60x20 ஆக மாற்றி அமைக்கும் படி செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

**மன்னார்:-**

மதிப்பீடுகளை அனுப்பி வைக்கப்பட்டதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டது.

சிலாவத்துறை G.M.M.S வித்தியாலயத்தின் விடுதிக்கு 5 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இவர்களின் மதிப்பீட்டில் 8.5 மில்லியனாக உள்ளதாக திரு.ஜெயசீலன் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.மேற்படி விடுதிக்கான வேலிகளை அடைப்பதற்காகவே மேலதிக செலவு என விளக்கம் கொடுக்கப்பட்டதுக்கு ,பாடசாலைக்குள் இருப்பதால் வேலி அடைக்கத்தேவையில்லை எனவும் 5 மில்லியனுக்குள் மதிப்பீடு தயாரித்து கொடுக்கும் படியும் தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு செயலாளரால் பணிக்கப்பட்டது.

வவுனியா தெற்கு வலயத்திற்கான அனைத்து வேலைகளும் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி வேலைகளை ஒவ்வொரு வலயக்கல்விப்பணிப்பாளர்களும் கண்காணிக்கவேண்டும் எனவும்,தங்கள் அறையிலுள்ள விளம்பரப்பலகையில் இவ்வேலைத்திட்டங்கள் சம்பந்தமான முன்னேற்றங்களை பதிவு செய்து கண்காணிக்க வேண்டியது உங்கள் பொறுப்பாகும் என செயலாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

## Theme 1.1.3

**ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி தொடர்பாக:-**

மேற்படி நிகழ்வுக்கான நேர அட்டவணைகள் ஒவ்வொரு வலயத்திற்கும் தரப்பட்டுள்ளது. அதன்படி நடாத்தலாம் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. 25.04.2016 பாடசாலை தொடங்குவதால் தமக்குரிய திகதியை மாற்றி அமைத்துத் தருமாறு மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்களால் கோரப்பட்டது. தங்களுக்குரிய பொருத்தமான திகதியில் வைக்கும் படி பணிக்கப்பட்டது.

யாழ்பாணவலயம் ஒழுங்குகள் யாவையும் ஒரு பொறுப்பாளரை அதாவது அபிவிருத்திப்பிரிவை பொறுப்பாக வைத்து செய்யும்படியும் சரியான பயனாளிகளை விரைவில் தெரிவு செய்து ஒழுங்குபடுத்தும் படியும் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

தாங்கள் ஏற்கனவே அனைத்து வலயக்கல்விப்பணிப்பாளர் கடந்த கூட்டத்தில் மேற்படி நிகழ்வுகளை எவ்வாறு நடாத்துவது தொடர்பாக விளக்கம் கொடுக்கப்பட்டுவிட்டதாக மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் அவர்களால் தெரிவிக்கபட்டது.

மாகாணக் கல்விப்பணிப்பாளர் அவர்கள் உரையாற்றும் போது காலையில் ஓர் புத்தாக்க கண்டு பிடிப்பு நிகழ்ச்சி நடாத்தலாம் எனவும், பல்கலைக்கழக கல்விமான் ஒருவரை அழைத்து பேருரை நிகழ்தலாம்,பின்னர் ஆசிரியர்கள் யாராவது ஆய்வுகள் அல்லது கற்பித்தல் முறையில் சிறப்பாக செயல்பட்டிருந்தால் அவர்களின் முன்வைப்புக்களை எடுத்துக்காட்டலாம்,

கண்காட்சி ஒன்றை ஒழுங்கு செய்து அதில் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் ஆராய்ச்சிகளை காட்சிப்படுத்தலாம், 2 வது நாளில் மாலையில் ஓர் கலை நிகழ்வு ஒழுங்குபடுத்தலாம் இதில் கட்டாயம் ஆசிரியர்கள்தான் பங்கு பற்றவேண்டும் எனவும்,கண்காட்சியை மேற்படி நிகழ்விற்கு பங்குபற்றாத அசிரியர்கள் மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் யாவரும் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் கடைசி நாள் நிகழ்வில் விரும்பினால் ஓர் மலர் வெளியீடும் நீங்கள் செய்யலாம் அல்லது ஏதாவது பதாதைகள் எழுதி வைக்கலாம் என கூறி சரியான முறையில் திட்டமிட்டு இந்நிகழ்வுகளை ஒழுங்கமைத்து சிறப்பாக செய்து முடிக்கப்படவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். ஏதாவது சிறியமாற்றங்கள் தேவையெனில் எமக்குத் தெரியப்படுத்தலாம் எனவும், மேற்படி நிகழ்வுகள் அசிரியர்களுக்கு ஓர் விழப்புணர்வை ஊட்டுவதாக அமைய வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

செயலாளர் அவர்கள் கருத்துத்தெரிவிக்கும் போது **மனித மேம்பாடும் ஆளுமையும்** என்னும் கருப்பொருளில் சிறப்பாக உரையாற்றும் பேராசிரியர் ஒருவரை அழைத்து சிறப்பாக நிகழ்வுகளை ஒழுங்கமைக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

**ஆசிரியர்களுக்கான கதிரைகள் மேசைகள் தொடர்பானது.**

- செயலாளர் உரையாற்றும் போது மேற்படி தேவைக்காக 20 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தேவையான கதிரைகள் மேசைகள் வழங்கப்படும்.அதற்கமைய கையோடு கூடிய பின்னல் கதிரைகளை வாங்கித் தரும்படி தெரிவிக்கப்பட்டது. ஆண்டு 4,5,10,11,க்கான புதிய தளபாடங்களை (கதிரைகள், மேசைகள்) நிரல் அமைச்சால் வழங்கும் எனவும் தெரிவித்தார்.
- இவ்வருடம் 5 மில்லியன் நிதியும் கடந்த ஆண்டுக்கான நிதியில் 1.5 மில்லியன் நிதியும் தளபாடங்கள் திருத்தங்களை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே தங்களுக்குரிய தேவைப்பாடுகளை வலயங்கள் ரீதியாக சமர்பிக்கும் படியும் தெரிவித்தார்.
- வவுனியாவில் உள்ள கைத்தொழில் திணைக்களத்திற்கு திருத்தத்திற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டது அதில் மிகுதி காசு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அங்கே எந்த வலயங்கள் தளபாடங்களை கொண்டு போய் கொடுத்தீர்கள் என்ற விபரத்தினைத் தரும்படி கோரப்பட்டடது.

- அவர்கள் திருத்தத்திற்காக மேலும் 1 லட்சம் கோரியுள்ளளதாகவும், வவுனியா வடக்கு,தெற்கு வலயங்கள் தான் அங்கே அனுப்பி உள்ளதாக கல்வி அமைச்சின் கணக்காளரால் கூறப்பட்டது.

## Theme 1.1.4 Water & Sanitation

**மேற்படி வேலைத்திட்டங்களுக்காக அனைத்து வலயங்களுக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.இதற்காக 94 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.இம்மாதம் 1 ஆம், 2ஆம் திகதிகளில் வலயங்களுக்குரிய மொத்த நிதியை வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும், நீங்களே பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஒப்பந்தம் கையொப்பமிட்டு வழங்கி அவ்வேலைகளை தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் ஊடாக மேற்பார்வை செய்ய வேண்டும். அகவே இவ் வேலைகளை இந்த மாதம் பாடசாலை விடுமுறைக்குள் செய்து முடிக்க அனைத்து வலயக் கல்விப்பணிப்பாளர்களும் முயற்சி செய்ய வேண்டும் என அவர்களிடம் பொறுப்பளித்தார்.100 வீதமும் ஒதுக்கப்படும் நிதியானது செலவு செய்யப்பட வேண்டும் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.**

**மேற்படி வேலைத்திட்டம் தொடர்பாக ஒவ்வொரு வலயங்களிலும் ஆராயப்பட்டு மிக விரைவாக செய்து முடிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு செயலாளரால் பணிக்கப்பட்டது.இவ்வேலை திட்டங்களை சரியாக முடிக்கும் ஒவ்வொரு தொழில்நுட்பஉத்தியோகத்தர்களுக்கும் புள்ளிகள் வழங்கப்படும் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.**

## Theme 1.1.5

**முறை சாரா பயிற்சி நிலையம்**

- யா/கோப்பாய் மகாவித்தியாலயம்,யா/இராமநாதன் கல்லூரி முறை சாரா பயிற்சி நிலையம் தொடர்பான வேலை முன்னேற்றங்கள் ஆராயப்பட்டது.
- தெல்லிப்பளையிலுள்ள சைவப்பிரகாச வித்தியாலயத்தில காணி இல்லாமையால் அதனை வேறு ஓர் இடத்திற்கு மாற்றும் படியும் தெரிவிக்கப்பட்டது.
- யா/தேவரயாளி இந்துக்ககல்லூரிக்கு ஒதுக்கப்பட்ட 2.3 மில்லியன் நிதி போதாமையினால் 4 மில்லியன் தேவை என தெரிவிக்கப்பட்டது.அகவே அதற்குரிய மதிப்பீட்டைத்தரும் படியும் கோரப்பட்டது.

- யா/நுணாவில் கிழக்கு அரசதமிழ்கலவன் பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் தளபாடங்களை கொள்வனவு செய்து தரும்படிகோரப்பட்டது.
- நெடுந்தீவுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் தளபாடங்களை கொள்வனவு செய்து தரும் படி கோரப்பட்டது.

- கிளிநொச்சியில் கோணாவில் மகாவித்தியாலயத்துக்கு பழைய கட்டம் இருப்பதால் தளபாடங்களை கொள்வனவு செய்து தரும்படி கோரப்பட்து.ஆனால் அங்கே புதிய விடுதி தேவையாக உள்ளது எனவே முறைசாரா பயிற்சி நிலையத்துக்கு ஒதுக்கப்பட் நிதியை விடுதிக்கு மாற்றி எடுக்கும் படியான ஓர் ஆலோசனையும் செயலாளரால் முன்வைக்கப்பட்டது.
- முக்கியமாக முறை சாரா பயிற்சி நிலையம் கட்டும் போது புதிதா இருக்கவேண்டும் வகுப்பறை ,நூலகம் இருக்க வேண்டும், முறைசாரா பயிற்சி அதிகாரசபை எதிர்பார்க்கும் அளவிற்கு அமைவு பெற்றால் தான் அதனிடமிருந்து எமக்குத் தேவையான சான்றிதழைப்(NVQ)பெறமுடியும் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.
- முல்லைத்தீவில் காணி இல்லாமையினால் உடனடியாக காணியை பார்க்கும் படியும் இல்லாவிட்டால் அதனை மு/முல்லைதீவு மகாவித்தியாலயத்திற்கு மாற்றும் படி தெரிவிக்கப்பட்டது.
- மன்னாரில் வண்ணாமோட்டைஅரசதமிழ்கலவன் பாடசாலைக்கு இன்று தான் காணியைக் கொள்வனவு செய்வது தொடர்பான கூட்டம் இடம்பெறுவதாக மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

## Theme 1.1.6 – விளையாட்டு முற்றம்

- மேற்படி திட்டத்திற்காக அனைத்து பாடசாலைகளுக்கும் வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.உடனடியாக வலயக்கல்விப்பணிப்பாளர் நிதியை அதிபருடன் உடன்படிக்கை ஒப்பந்தம் செய்து பாடசாலைக்கு அனுப்பி விளையாட்டு உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பாடசாலையும் தனக்குரிய இடத்தினை பொறுத்து பூங்காவாக வடிவமைப்பதற்கு தொழில்நுட்பஉத்தியோகத்தர்கள் உதவி செய்யும் படியும், நிதி முழுவதையும்(0.725 மில்லியன் ரூபா) செலவு செய்ததை உறுதிப்படுத்தும் படியும் தெரிவித்ததோடு. அனைத்து வலயக்கல்விப்பணிப்பாளர்களும் ஏப்ரல் 9 ஆம் திகதிக்குள் நிதி தரப்படும் அப்பாடசாலை

அபிவிருத்தி சங்கத்திற்கு உடனடியாக கையளித்து விடுமுறைக்காலப்பகுதியில் இவ் வேலைகளை செய்து முடிக்க ஊக்கப்படுத்தவும்.

ஆகவே இந்த விடுமுறை காலப்பகுதிக்குள் மலசல கூடம் அமைப்பது, கிணறு அமைப்பது விளையாட்டு முற்றம் அமைப்பது தொடர்பாக அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டு அடுத்த மாதம் கூட்டத்திற்கு அறிக்கை சமர்பிக்கும் படி செயலாளரால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி வேலைகளுக்காக் அனைத்து பாடசாலைகளுக்கும் எம்மால் ஒதுக்கப்பட்ட நிதிகளை அனைத்து கணக்காளர்களும் பாடசாலைகளுக்கு விரைவாக கையளித்து வேலைகள் விரைவாக நடைபெற உதவவேண்டும் என மேலும் கேட்டுக் கொண்டார்.

TSEP வேலைகள் தொடர்பான முன்னேற்றங்களில் கட்டட வேலைகள் வலயங்கள் ரீதியாக ஆராயப்பட்டது வேலைககளை கவனமாகப்பார்த்து கொள்வதோடு நவம்பர் மாதத்திற்குள் அனைத்து வேலைகளும் செய்து முடிக்கப்பட்டு அனைத்து கொடுப்பனவுகளும் செலுத்தி முடிக்கப்பட வேண்டும் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

பொருட்களின் பெறுகை

51 திட்டங்கள் இருப்பதாகவும் அதில் இதுவரை 31 தான் கேள்வி கோரி முடித்துள்ளதாகவும் மிகுதி மாற்றங்கள் செய்து அனுப்பி உள்ளதாகவும் அதற்கான அனுமதி கிடைக்காமையால் தாமதம் ஏற்படுவதாகவும் மாகாண கல்வித்திணைக்கள கணக்காளரால் தெரிவிக்கப்பட்டது.
பெறுகைத் திட்டம் தரவில்லை என செயலாளரால் தெரிவிக்கப்பட்டதற்கு இன்று அதற்கான வன் பதிவு தருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. மேலும் TSEP Programme UpDate செய்யப்பட்டு 01.04.2016 இல் இணையத்தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அடுத்த கூட்டத்திற்குள்

**அனைத்து வேலைகளுக்கும் கேள்விக் கோரல் முடிக்கப்பட்டிருக்க வேண்டும் என செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.**

**உதவித் தொகை55 மில்லியன்**

**பாடசாலைக்கு பணத்தினை முழுவதும் கொடுத்து வேலைகள் முடிக்கப்படல் வேண்டும் என செயலாளரால் கோரப்பட்டது.**
**பாடசாலைகளில் நீண்டகாலமாக ஒதுக்கப்பட்ட நிதிகளை செலவு செய்யாமலும் இருப்பதால் அதனை பார்த்துக் கொள்வதோடு அதனை செலவு செய்ததை உறுதிப்படுத்தவும் வேண்டும் என மாகாணகம கல்விப் பணிப்பாளர்க்குத் தெரியப்படுப்பினார் தெரிவிக்கப்பட்டது.**

**இந்தியன் உதவித் திட்டம்**

**இந்தியன் உதவித் திட்ட வேலை தொடர்பாக 25 வேலைகளில் 6 முக்கிய வேலைகள் தொடர்பாக பொறியலாளரால் விளக்கப்பட்டது.01.04.2016 ல் பத்திரிகையில் பிரசுரித்து 27.04.216 ல் கேள்விக் கோரல் பண்ணுவுள்ளதாக தெரிவத்தார்.**

## Un Habitant வேலைகள்.

**மேற்படி வேலைத்திட்டம் தொடர்பாக மன்னார் மாவட்டத்தில் நடைபெறவுள்ள வேலைகள் ஆராயப்பட்டது. அவ் வேலைத்திட்டத்திற்கு பணத்தினை பெற்றுக் கொள்வதற்காக சமுதாயத்தின் பங்கு பெற்றுக் கொள்ளும் பொருட்டு பெற்றோர் அல்லது சமுதாயத்தின் 3 ஆம் நபர் ஒருவரின் கையொப்பம் இட வேண்டிய தேவை இருப்பதாக வலயக்கல்விப்பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டதற்கு மேற்படி வேலைத்திட்டத்திற்காக பிரதம செயலாளருடன் ஒப்பந்தம் செய்தபடி வேலையை தொடரும்படி அறிவுறுத்துமாறு செயலாளர் தெரிவத்தார்.**

நிரல் அமைச்சு வேலைகள்.

- கோப்பாய் கல்வியற்கல்லூரி வேலைகள் 35 % முடிவடைந்து விட்டதாகவும்,கொடுப்பனவுகள் தாமதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதற்கு 85 மில்லியன் ஒதுக்கீட்டில் 40 மில்லியன் விடுவிப்பதற்காக ஒப்பமிட்டுள்ளதாக பிரதமகணக்காளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- தேசிய கல்வியற்கல்லூரி கோப்பாயக்கான நிதி இதுவரையும் விடுவிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது.வவுனியா கல்வியற்கல்லூரியில் வேலை நடைபெறுவதாகவும்.தெரிவிக்கப்பட்டு வேலைத்திட்ட முன்னேற்றங்கள் அவற்றுக்காக ஒதுக்கப்பட்ட நிதிநிலமைகள் பற்றி வலயங்கள் ரீதியாக மேலும் ஆராயப்பட்டது.

கல்வி அபிவிருத்தி

மேற்படி விடயமானது மத்திய அரசினால் அமுல்படுத்தப்பட்ட சகல மாகாணங்களும் வலயங்களும் இணைந்து அடையப்பட வேண்டிய இலக்குகள் தொடர்பாக ஆராயப்பட்டது. கடந்த ஆண்டுகளில் வட மாகாணத்தில் மாணவாகள் க.பொ.த.சாதாரண தரத்தில் பெற்றுக் கொண்ட பெறுபேறுகளையும் அவற்றின் அடைவுமட்ட வீதமும் காட்டப்பட்டது.

முக்கியமாக DLR, DLI தொடர்பாக விளக்கப்பட்டு எமது வடமாகாணததில் உள்ள தெரிவு செய்யப்பட்ட 9 பிரதான பகுதியிலும் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் அடையப்படாவிட்டால் எதிர்வரும் ஆண்டுகளில் எமக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி குறைப்புச் செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

செயலாளர் அவர்கள் உரையாற்றும் போது இவ்வருடம் கா.பொ.த சாதாரண தரத்தில் 5A முதல் 9A வரை பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்க ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் எனவும்

அவர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புப்பணமானது எமது நிதி இருப்பைக் கொண்டு எவ்வளவு என தீர்மானித்து கூறுவதாகவும் தெரிவித்தார்.

- கௌரவ கல்வி அமைச்சர் அவர்கள் 40% க்கு குறைவாக விஞ்ஞானம் ,கணித பாடங்களில் புள்ளிகளை பெற்ற மாணவர்களுக்கு விசேட கவனம் எடுக்க வேண்டும் என்று சகல வலயக்கல்விப்பணிப்பளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது, இவ் நடவடிக்கைகளை பற்றி சகல பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

- தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பாக ஆராயப்பட்டது, தொண்டர் ஆசிரியர்களின் விபரங்களை முன்வைக்குமாறு சகல வலயக்கல்வி அலுவலக பணிப்பாளர்களிடம் கௌரவ கல்வி அமைச்சரால் கோரிக்கை விடுக்கப்பட்டது.
- புது வருடப்பிறப்பை முன்னிட்டு கொண்டாட்டங்களை மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடாத்துமாறு கௌரவ கல்வி அமைச்சரால் கோரிக்கை விடுக்கப்பட்டது. 07.04.2016 அன்று மன்னார் மாவட்டத்தில் நடைபெற இருப்பதாக மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.
- ஆசிரியர் கலாசாலையில் இருந்து வெளியேறிய பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் நியமனங்களின் விபரங்களை அனுப்பி வைக்குமாறு செயலாளரினால் கேட்டுக்கொள்ளப்பட்டது.
- 2016 ஆண்டு க.பொ.த.உயர் தரத்தில் கற்பிக்கும் அனைத்து பாடஆசிரியர்களுக்குமான இடமாற்ற அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளது.

- இனி வரும் 2017 ம் ஆண்டு பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை குறைப்பு செய்தலில் ,ஒரு வகுப்பறையில் 30 + 2 =32 மாணவர்களை மாத்திரம் அனுமதிக்குமாறு சகல வலயக்கல்வி பணிப்பாளர்களுக்கு கௌரவ கல்வி அமைச்சரால் கூறப்பட்டது.
- EMIS – Teachers Salary வழங்குதல் தொடர்பாக ஆராயப்பட்டது, பிரதம செயலாளரிடம் விபரங்களை அனுப்பி வைக்கும் போது செயலாளர் அவர்கள் தமக்கும் அனுப்பி வைக்குமாறு தெரிவித்தார்.
- ஆசிரியர் உள்ளீர்ப்பு தொடர்பாக ஆராயப்பட்டது.
- 1.42 pm மணியளவில் கூட்டம் நிறைவுற்றது.

இ.இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்

**இ.இரவீந்திரன்**
**செயலாளர்,**
**கல்வி, பண்பாட்டலுவல்கள்,**
**விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**